卐

17-வது நூல்

# சமணத்தின் காலமும் சமய மாறுதலும்

இந்த நூலுக்கு நன்கொடை அளித்தவர் :—

**P. D. மல்லிநாத நைனர்,**

S/o S. M. அப்பாண்டை நைனர்,

சக்ராபுரம், :: செஞ்சி தாலுக்கா.


இந்த நூலைத் தொகுத்தவர் :—

**டாக்டர். T. A. மாணிக்க சாஸ்திரி,**

நெ. 41 பெரிய ஜைனர் வீதி, கொசப்பாளையம்,

ஆரணி. 632301 வ. ஆ.


விலை ரூ. **1—50**


கிருஷ்ண பிரஸ், ஆரணி,

卐

# சமணத்தின் காலமும் சமய மாறுதலும்.

தஜ்ஜயதி பரஞ்ஜோதி : ஸமம் ஸ்மஸ்த ரனத்த பர்யாயை
தர்மண தலயிவஸ கலாப்ரதி பலதிமலிகாயத்ரா

பரம்பொருளான பரமாத்மன் பரஞ்ஜோதி வடிவானவர் இவர் உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளின் தன்மையினையும் மற்றும் சராசரங்களின் தன்மையினையும் அதன் எண்ணற்ற (பர்யாயம்) மாறுதல்களையும் கண்ணாடியில் காண்பதைப் போல் ஸகலமும் அறியும் ஆற்றலுள்ளவர். கையிலுள்ள நெல்லிக்கனி போல் அறியவல்லவர்:

காலம் உயர்வு தாழ்வு என மாறுபடுவது போல் பலமுறை இந்த சமணர்கள் தன்னுடைய நன்னெறிக்காக பல பிற சமயத் தாரால் பல இன்னல்களுக்காளானார்கள். குறிப்பாக 1300 ம் ஆண்டில் தொடர்ந்து ப்ராம்மணர்களாலும் மதவெறியர்களாலும் செய்த கொடுமைகள் கொஞ்ச நஞ்சமில்லை இவ்வளவும் எதற்காக வெனில் அஹிம்சா என்ற தர்மபண்பிற்கே. தர்ம ப்ரசாரத் தால் வந்த வினையே அதாவது அஜபாகம், அஷ்வமேதயாகம் முதலான பலயாகம் செய்யவேண்டாம் இந்த யாகத்தால் உயிர் பலி இடுவதால் அதிலுண்டான பாவம் மாயைகேற்ற பிறவியில் இந்த ஜீவன் சொல்லொணாத தீயபிறவிக்கு ஆளாகிறான் பழிக் குப்பழியாக பலபிறவியில் நொண்டி முடவன் முதலான பல பல விகார உருவைப்பெற்று தவிக்கிறான் வாயில்லாத ஆடு மாடு முதலானதை தன்பொருட்டு அதைக் கொல்கிறான்

கேட்க வாயில்லை அல்லவா அதைப்போல காலம் அட்ட-வணைப்போல் வரும்போது நிச்சயம் எதிர்பலனுண்டு அவைகளை யாகம் என சொல்லி சொர்கம்புகும் என பொய்ப்ரசாரம் செய்து தின்று வருபவர்கள் இருக்கும் வரை அனீதி இருந்தே தீரும். நல்லவர்தடுக்க இன்னலுக்கு ஆளாகின்றனா. இத்தகையான மதத்துவேஷிகள் தன்பொருட்டு ஆதாரமில்லா. உண்மையற்ற பொய் நூல்களைக்கொண்டு அறிந்தவரும். அறியாதவரும் ஏமாளி யாகின்றனர் எந்த ஸமயத்தில் உயிர் கொலை உண்டோ அங்கு உண்மை தர்மமில்லை, ஆனல் இவர்கள் செய்யும் தெய்வவழிபாடு கள் தெரியாதவன் சித்திரம் வரைவதுபோல் கொலையுள்ள யிடத் தில் பொய், திருடு. ப்ரம்மசரியாயின்மை எல்லாம் இருக்கும் இவர்களின் உண்மையை உணர்பவரும் உண்டு.

ஆதிபகவான் க்ஷத்ரிய வைஷ்ய சூத்திரர்கள் என்று மூன்று வர்ணாஸ்ரமத்தையும் ஜைனசமயத்தையும் இதில் இல்லறம் துறவரம் என்று கூறப்படும் இருபக்ஷமுள்ள மார்கத்தினையும் மக்களுக்கு அவஸர்பிணி மூன்றும் காலம் கழிய போகபூமி அழிந்து கர்மபூமி ஏற்பட்ட முதலில் ஆதிபகவான் முதலில் அறம் போதித்தார் என மஹாபுராணத்தில் கூறியிருக்கிறபடி நாம் அறிய வேண்டியுள்ளது. ஸ்ருதாவதாரம் என்னும் நூலில் கி மு 365 பத்திரபாகுமுனிவர்கள் உள்பட 24000 முனிவர்களுடன் உஜ்-ஜயினி நகர பூங்காவில் வந்து தங்கி இருந்தபோது இதையறிந்த நகரமக்களும் ராஜா சந்திரகுப்தனும் அறிந்து வலம்வந்து முனிவர்களை வணங்கினான் என்பது அறியப்படுகிறது அப்போது அரசன் தான் கண்ட கனவின் பலனை அறிந்து ஷ முனிகளிடம் தீக்ஷை கொண்டான் அது மயம் பத்திரபாஹு முனிவர் ஜினதாஸன் இல்லத்திற்கு ஆஹாரம் கொள்ள சென்றபோது அருகிலுள்ள வீட்டில் 60 நாள் குழந்தையொன்று அழுவதை கேட்ட இவர் உணவு கொள்ளாது திரும்பி விட்டார். இதனால் இவர் 12ஆண்டுகள் கடும் பஞ்சம் வருவதையுணர்ந்து இருந்த போது அஸரீரி வார்த்தையை கேட்டார்கள் அப்போது இவர் நினைத்தார் தனக்கும் ஆயுள் குறைவாய் இருப்பதை உணர்ந்து விசாகாசாரியருக்கு தன்பதவியைதந்து 24000முனிகளுடன் வெளிநாடுசெல்ல தீர்மானித்தார்கள் இவர்களில் 12000 போர்களை உஜ்ஜயினியை விட்டு தென்தேசம் செல்லும்படி கூறினார் 12000 பேர்கள் கர்னடக மானிலமான ஸ்ரவணபெல்குளத்தை நோக்கி சென்றார்கள் இங்குள்ள சின்னமலையில் பத்ரபாஹு முனி கடுந்தவம்செய்து சொர்கம் புகுந்தார் ராஜாவான சந்தரகுப்தனும் 12 பனிரண்டு ஆண்டுகள் தவமியற்றி சொர்கம் புகுந்தான் அப்போது சூழ்நிலை கெட்டுப்போனதால் தர்மப்ரஷ்டருனர்கள் அப்போதுஇராமஸ்தூல பத்தி ஆசாரியர் முதலானவர் பத்திரபாஹுவின் தர்மத்திற்கு மாறு பட்டவாறு ஷ்வேதாம் பரர்கள் என ஸமயத்தையும் காஷ்டஸங்கத்தையும் அந்தபாலமதத்தையும் தோற்றுவித்தார்கள் இந்து தேச சரிதத்தில் சந்திரகுப்பருடைய பெயர் புகழ் பெற்றது இவர் திகம்பரமுனியானார் இந்த ராஜாமகததேசாதிபதி சக்கரவர்த்தியும் கூட இதை அநேக நூல்களில் காணலாம் இதை மேனாட்டு க்ரேக்களும் கூறுகின்றார்கள் லூாயிஸ் என்னும் அறிஞனும் டாக்டர் தாமஸ் என்பவரும் கூறும் பல உண்மைகள் உண்மை ஸாஸனமாக கொண்ட கல்வேட்டும் கட்டிட ஆதாரங்களும் நிரணயிக்கின்றன கவர்மெண்ட்மிநூஜியம் ஆர்கியாலாறிகல் அஸாட்ண்ட் ஸ்ரீ மான் இராமச்சந்திர சாஸ்திரியாரால் அறிவது யாதெனில் கி மு

550 லிருந்து 600 வரை காஞ்சிபுரத்தை சிம்ம விஷ்ணு என்னும் ஜைனபல்லவன் ஆண்டு வந்தான் என கல்வெட்டில் அறியலாம் இவன் மகன் மகேந்திரவர்மன் 600லிருந்து 630 வரை ஆண்டான்

அப்பர் என்பவர் ஜைநத்திலிருந்து சைவத்தை தழுவச் செய்து தான் இவன் மகன் **நரசிம்மவர்மன்** வைணவத்தை தழுவினன் மஹேந்திரவர்மனுடைய முன்னோர்கள் பல்லவர்கள் இவர்கள் நேமிதீர்த்தங்கரர் காலத்தில் கஞ்சியில் அரசனாக திகழ்ந்தான் என குறிப்புகள் உள்ளன இதில்ஒன்று நாககுமாரகாவியம் 4ம் சர்கத்தில் 91 கவியில் காண்க பல்லவன நாககுமாரரை எதிர்கொண்டு அழைத்தார்

*கவி ததஃ காஞ்சீபுரம் ப்ராப மத்ரராஜாஸித் பல்லவ;*

தேனுர்த பதமாக **த்ய ஸ்வபுரம்** ஸப்ராவஷித

இந்த காலம் நேமி 22 பகவான் **கிருஷ்ணன் பாண்டவர்கள்** காலத்தில் பல்லவர்கற் என்ற அரசர்கள் காஞ்சியை ஆண்டார்கள் இந்த பரம்பரையினர்களுக்கு பல்லவர்கள் என பெயர். மேலும் 1929 ஆண்டு செப்டம்பர் 8 தேதி குடியரசு பத்திரிகையில் திருநெல்வேலி சைவ மெய்யன்பர் மகாநாட்டில் கிரு பி சிதம்பரம் பிள்ளை அவர்கள் வரவேற்புரையில் ஹிந்து சமணப்போர் என்பதை எழுதி இருக்கிறர் அதன் **சங்ரகம்** 100 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்த **ப்ரஞ்சு தனவான்** சமணப்போரைப் பற்றியும சமணர்களுக்குண்டான விபத்தைப்பற்றியும் சண்டைக்குண்டான காரணம் விபத்துக்களைப்பற்றியும் குறைவாக சொல்லி இருக்கிறர்கள் சமணர்கள் கட்டாயப்படுத்தப்பட்டார்கள் இதற்கு மூல காரணம் ப்ராமணர்கள் உயிர்கொலை புரிவதாலுண்டான வேள்வி யாகம் என்பது தான் காரணம். சமணர்கள் இதை கண்டிப்பதாலும் வாய்சண்டை கைசண்டையாக மாறியது; காரணம் அந்தணர் வருவாய் குறைவதால் சண்டை இந்த காரணத்தால் சைவர்களை தன் வயப்படுத்தினர்கள் அரசனை வயப்படுத்தினர்கள் சண்டை வலுத்தது மேலும் ப்ரஞ்சு கனவான் திரு. ஆபேடு பாய்ஸ் என்பவர் கூறியது சமண மதம் தென்னாட்டில் ஆதிக்கம் பெற்றிருந்தால் ப்ராமண மதத்தை பரப்ப முடியவில்லை. இதனல் ப்ராமணர்கள் நீண்ட காலம் போர் புரிந்து சமணர்களை கொல்லாத நாளே இல்லை. கடைசியில் நிலை பெற செய்தார்கள் ப்ராமணர்களின் சொற்படி தண்டிக்கப் பட்டார்கள் கட்டாயப் படுத்தப்பட்டார்கள். இந்த சமணப் போர 1000 ஆண்டிற்கு மேலானது, இந்தப் பிராமணர்கள் ஒரு நூலில் உயிர்கொலை பாபம் என்றும் ஒரு நூலில் இல்லை என்றும் ஒரு இடத்தில் சைவத்தை

உயர்த்தியும் தாழ்த்தியும் பலமாற்றுக் கொள்கைகளை உடையவரா யும் உள்ளார்கள். இவர்களுக்கு சமணர்கள் கண்டித்தது தாங்காத தால் வடதிசையிலும்தென்திசையிலும்உள்ள அரசர்களை தன்வயப் படுத்தினர்கள் சமண நூல்களை மாற்றியமைத்தார்கள் எண்ணற் றதை தீயிலிட்டார்கள் பல ஆலயங்களை மாற்றியமைத்தார்கள் காஞ்சியில் காமாட்சியம்மன் கோவில் என்பது முன்னாள் தர்மதே வியின் கோவில் மற்றும் வரதராஜர் கோவில் என்பது வர்தமானர் கோவிலாகும் இப்படி தெற்கில் பலதையும் வடக்கிலுமாற்றியமை த்தார்கள் சிலதிற்கு முகத்தில் கண் மறைத்தவாறு நாமத்தை தீட் டினர்கள் சிலதில் விக்ரஹத்தில் சில அடையாளங்களை மாற்றினர் கள் இதனல் பல சமணர்கள் சமணன் இல்லை என குறுக்கும் நெ டுக்கும் விபூதியையும் திரிசனமும் மாற்றி யமைத்தார்கள் இவ்வள விற்கும் காரணம் ப்ராம்மணர்களின் கொடுமை இதே போல் பல பல இந்த ப்ராம்மணர்களில் பலர் இதைவிரும்பாத உத்தமர்களும் கூட்டு சேரா கொள்கையினராகவே இருந்தார்கள் அந்த உத்தமர் கள் தந்த சில சான்றுகளால் ஊகிக்கப்படுகிறது இத்த ப்ராமணர் கள் பலவிதமாக உள்ளார்கள் சில ப்ராமணர்கள் சைவப்ராமணர் களென்றும் சிலர் ஆர்யப்ராம்மணர்கள் என்றும் இருக்கிறர்கள் இவர்கள் பெரும்பாலும் அஸி மஸி க்ருஷி வாணிபம் வித்யா ஸில் பம் இதை பின்பற்றி வாழ்பவர்கள் உத்தமர்கள் இவர்களே ஆர்ய ப்ராம்மணர்கள் மற்றவர்கள் உத்யோகத்திலும் இருப்பார் இவர் களல்லாது ஏனையோர் நடத்தை சரியில்லாதவர்கள் இவர்கள்தான் வைணவப்ராம்மண ரென்பவர்களாவார்கள் என்பது பொருந்தாது இப்படி அரசர்கள் பரம்பரையாகவந்தகாலம் கி பி 6வேதுநூற்றுண் டுவரை தொடர்ந்துவந்தது வந்த மஹேந்திரவர்மன்என்னும் பல்ல வன் சைவத்தில் சேரும் வரை ஜைனர்களின் அரச பரம்பரை தொ டர்ந்தது பின்ஜைனரல்லாதார் ஆண்டுவந்தார்கள் நேமியின்முதல் பார்ஸ்வநாதா வரை இடைக்காலம் 84000 ஆண்டுகள் பின் பாரி ஸா இதன்பின் 250 ஆண்டு இடைக்காலம் பின் மஹாவீரர் மோ க்ஷம் சென்று இன்றுவரை 2513 ஆண்டுகள் கடந்தன ஆக நேமி யின் பின் பர்ஸநாதர் 84000 ஆண்டு கழித்து தோன்றினர் பின் 250 ஆண்டு கழித்து பின் மஹாவீரர் ஆக 84000 எல்லாம் சேர் ந்து இதுவரை இத்தனை ஆயிரம் ஆண்டுகள் 1966-4-28 டோடு 86763 (எண்பத்தி ஆருயிரத்து எழுநூற்று அறுபத்தி மூன்று) ஆண்டில் கி. மு. 630 ஆண்டு வரை ஜைன அரசர்களே ஆண்டு வந்தார்களென்பது தூய்மையாய் காணப்படுகிறது என்பதை அனைவரும் அறிய வாய்ப்பு.

பாண்டவர்கள் காலம் தொட்டு இன்றுவரை 86763 ஆண்டுகள் கடந்தோடின

ப்ராம்மணர்களாலும் மற்ற ஹிந்துக்களாலும் சிறப்புடன் கொண்டாடும் நான்கு வேதங்களில் ருக் வேதத்தில் அஷ்டகம் 2 அத்தியாயம் 7ல் வர்கம் 17ல் கவியின் பொருளை காண்பீர்கள்

அருகன் பிபர்ஷி சாயகாநி தன்வார்ஹ
நிஷ்கம் யஜனம் விஸ்வரூபம்
மவ்வமநவர் ஒனஜீயோ ரித்திரத்வதஸ்தி

என்ற கவியால் அருகக்கடவுளை துதிக்கப்படுகிறது இன்னும் ருக் வேதத்தில் இதோ தரைலோக்யப்ரதிஷ்டிதான். சதுர்விம்ஷதீதீர்த்தங்கரான்வ்ருஷபாத்யவர்தமானந்தான்ஸித்தான்சரணம்ப்ரபத்யே மூவுலகத்தாலும் வணங்கப்பட்ட சித்தரானவ்ரஷபரை மூதல்கொண்டு 24போகளையும் நான் வணங்குகிறேன் எனப்பொருள் இன்னும் யஜுர்வேதத்தில் அஷ்டகம் 9 25ல் 22வது நேமியை கூறப்படுகிறது இதேபோல் இந்துக்களின் 18 புராணங்களில் சிவபுராணம் ப்ரமாண்ட புராணம் நாக புராணம் அக்னி புராணம், ப்ரபாஸ புராணம் முதலானநூல்களில் ஜைனசமயக்கடவுளை ஆதிபகவானை கூறப்பட்டிருப்பது காணலாம் இப்படிபலநூல்களில் இருப்பதைபலதை மாற்றினர்கள் இவர்களின் கண்களில் தென்படாதது புரியாததையும் விகல்பமாக்கினர்கள் தொல்காப்பியர் நான்கு வர்ணத்தாரை குறிப்பிடுகிறார்

1 நூலே கரக முக்கொண் மணையே
யாயுங் காலே யந்தணர்குறிய — ப்ராம்மணன்

2 அந்தணர் குறியவமரர்க்,
கொன்றியவருஉம் பொருளு மாறுளவே — க்ஷத்திரியன்

3 வைசிகன் பெருமே வாணிக வாழ்க்கை — வைஷ்யன்

4 வேளாளன் மாந்தர்கமுதூணல்ல
தில்லென மொழிய பிறவகை நிகழ்ச்சி — சூத்திரன்

இவ்வித வரலாறுகளைக்கொண்டு ஜைனமதம் மிகப் பழமை வாய்ந்தது என உணரலாம் இந்த பரதக்ஷேத்திரத்தின்கண் ஆர்யகண்டம் முழுமையும் இவ்வித ஜைனமதமே நிலைத்திருந்தது ஆதிபகவான் எனப் போற்றப்படும் இவர் முதலாகக் கொண்டு இருபத்து நான்காம் தீர்த்தங்கரராகிய மஹாவீரா காலத்திற்கு முன்னமேயே ஜைன மதத்திலிருந்து சைவம் வைணவம் முதலான 96 தொண்ணூற்றி ஆறு பாஷண்டி மதங்களும் அவற்றில் 363 முன்னூற்று அறுபத்தி மூன்று விகல்பமாய் வர்த்திக்கும் மதங்கள் தோன்றியிருந்தன அந்த மதங்கள் திவாகரன் முன் ஏற்றிய தீபம்போல் பிரகாசமில்லாமல் தோன்றின இந்த மதங்கள் ஜைன மதத்தின் முன்

மின்மினி போல பிரகாமின்றி மங்கின. ஆரியர்கள் தென் நாட்டிற் குடியேறிச் சைவம், வைணவம் முதலிய மதங்களை நிலைநாட்டினர்கள். இதனால் சைவம் என்னும் வடச்சொல் சிவமதத்திற்கும் வைணவம் விஷ்னுமதத்திற்கும் பெயர்களாயின. வடக்கிலிருந்து வந்த சைவ ஆசிரியர்கள் தென்னாட்டில் குடியேறி சைவ மதத்தை நிலைநாட்டிய காலம் தொல்காப்பியர் காலத்திற்கு பின்னும் கூய் பாண்டியராஜன் காலத்திற்கு முன்னும் உள்ள காலமென்பது விளக்கமானது எவ்விதமென்றால் தொல்காப்பியர் கவி. சக்ரகினவியு மவற்றே ரற்றே அ ஐ ஔவென மூன்றலங்கடையே எழுத்ததிகாரம் மொழிமரபு 62-ம் சூத்திரத்தில் விளக்கியபடி ச. சை. சௌ என்ற எழுத்துக்களை முதலாக உடைய பதங்கள் சங்கம், சபை, சைவம். சௌரியம் என்பன போன்ற சொற்கள் தமிழ்மொழிகளல்லவென்பது தெளிவு. ஆகையால் சைவம் என்னும் பெயர் சைவ சித்தாந்தம் என்பதும் மற்றும் சிவன் கோவில், சிவன் வழிபாடு முதலானவைகள் தொல்காப்பியர் காலத்திலில்லை என்பது திண்ணம் மேலும் தொல்காப்பிய ஆசிரியர் தெய்வங்களை சொன்னவிடத்து புத்தரை கூறாததுபோல் சிவனைப் பற்றியும் சொல்லவில்லை அருகன் விஷ்ணு இந்திரன் வருணன் இவர்களை கூறினர். (சூத்ரம்) வினையினினகி விளங்கிய வறிவன் என்னும் சூத்திரத்தால் அருகனையும் முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் முதலான நிலங்களுக்குரிய விஷ்ணு முருகன் இந்திரன் வருணன் இந்த நான்கை கூறினர், இவர்களை தேவர்களென யாதவர் வேடர் கானவர் மீன் பிடிப்போர் இவர்கள் தான் வழிபடவேண்டியவர்கள் வழிபட்டு வந்தார்கள் இதை புகழேந்தி புலவர் கூறினர். கவி :—

மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்

தொல்காப்பியர் மாயோனை குறித்து இருப்பதைபார்த்தால் விஷ்ணு முல்லை நிலத்துக்குரியரென்றும் இவரை வழிபட்டவர் யாதவர் இதனால் தொல்காப்பியரின் முன் வைணவ ப்ராமணர்கள் தென் தேசத்தில் குடியேறி இருந்ததாக தெரியவில்லை பிராம்மணர்கள் இருந்திருக்கலாம் வளர்ச்சியில்லை அப்போது வடமொழி நூல்கள் தவிர தமிழ் நூல்களில்லை பின் ஜைனர்களால் செய்த அடிப்படை நூல்களை நன்றாக கற்று ஆழ்வாராதிகள் திருவாய்மொழி முதல் ஆனதைச் செய்தார்கள் வலு குன்றிய வைணவம் தமிழில் வளர்

ச்சி பெற்றது ராமாநுஜர் காலத்தில் ப்ரபலமானது இவ்விதமான தற்கு தமிழ் நூல்கள் போதுமான சான்ருகும்
சிவபெருமான் மகள் என்பது பொருத்தமன்று எப்படி வைணவ புராணத்தில் விஷ்ணு அம்சம் என்றும் ராமனுக பிறந்து. சீதையை மணந்து லவணுங்குஷன் என இரு பிள்ளைகளை பெற்ருர். இவ்வித சைவர் ப்ரம்மத்தினின்று தோன்றியவர் ஈஷ்வரன் இவர் மனைவி பார்வதி இவர்களுக்கு முருகன் பிறந்ததாக இல்லாது நெற்றிக்கண் மூலமாக ஆறு தீப்பொறிகள் வெளிப்பட்டு நிற்க அதனை கங்கை யில் விட கட்டளையிட அக்னி தேவின் வாயுதேவன் இதனைக் கொண்டுபோய் கங்கையிலிட்ட உடனே அது பிள்ளைகளாக ஆறு தாமரையில் எழுந்தருள இதனை உமையாள் தன் அன்பால் கரங்களை நீட்டி குழந்தைகளை மார்போடு அணைத்தாள் இதனை ஆறுமுகம் படைத்தானென்று கந்தபுராணம் உற்பத்தி காணடம் சரவண படலத்தில் காணலாம். முருகனை சிவபெருமான் அம்சம் எனலாம் பிள்ளை என்று கூறுவது பொருத்தமற்றது மேலும் காஞ்சிபுரத்தில் சுரகரீச படலத்தில் ஆறுமுகனின் பிறப்பு காண்க சிவபெருமான் தன்னுடைய வீரியத்தை உண்ணுங்கள் என்றும் அப்படியே அக்னித் தேவர் முதல் திருமால் ப்ரம்மா இந்திரன் இவர்கள் உண்டார்களாம் இதனுல் ப்ரம்மா இந்திரன் முதலானவர்கள் கருதரித்து ஜுரம் காண பின் எல்லா தேவர்களும் காஞ்சிப்பதியில் நீராட நோய் தீர்ந்தது பின் மேரு மலையை அடைய கர்பநோய் நீங்கி பொன் மயமான ஜோதி பரவி கங்கையின் வழியால் ஆறுமுகன் தோன்றினுன் என்று கூறுகிறது இப்படி பொருத்தமற்றதை புராணத்திற்கு ஒரு விதமாக கூறி இருக்கிருர்கள் நிஜமான நிலையான வார்த்தைகளே இல்லை இவ்வித கதைகள் அடங்கிய சைவ வைணவரின் புராணங்கள் தொல்காப்பியா காலத்திற்கு பின் சிலவாயிரமாண்டுகளுக்குப்பின் இயற்றியது என்பது அனைவரும் உணரலாம் மேலும் வேடுவர்களின் கடவுள் முருகன் புகழேந்தி புலவரும் வேடுவனின் கடவுள் என்ருர் சிவன் வழிபாடு தொல்காப்பியர் காலத்தில் இல்லை மேலும் கந்தழி என்னும் சொல்லுக்குநாச்சிக்கினியர் கூறிய உரையை கொண்டே சைவசமயத்தவர் சிவனை என்றும் இதில் ஆச்சாரியர்கள் எச்சமயத்தையும் காட்டாதவர்கள் ஆகையால் ஜைனர் வைணவர் பல சமயத்தார்கள் தங்கள் சமயத்தவர் என்கிருர்கள் கந்தழி என்பதன் பொருள் வேருகும் கந்து - பற்றுக்கொடு அழி-அழித்தல் என்பது பொருள் பற்றுக்கோடு அழிதலையுடைய பொருள் என்று கூறுவது பொருத்தமற்றது பற்றுக்கோடு

இருந்தால் தானே அதற்குவு கூறுதல் பொருந்தும் இதற்குபலர் மாருக கூறி இருக்கிருர்கள்இளம்பூர்ணர் வீர செர்ழியம் பொருட்ப டலம் 21-ம் செய்யுள் வைத்தியநாத தேசிகர் வீரசோழியக்காசர் கருத்துக்களும் உண்டு தொல்காப்பியர் பின் சைவ ஆரியர்கள் விதை விதைத்தார்கள் இது வளரும்போது மங்கையர்க்கரசி குலச் சிறையார் திருஞானசம்பந்தர் இவர்கள் சைவம் ஓங்க சமணர்கள் என்பவரை அழித்தால் சைவம் வளரும் என யோஜித்து சமணர் களை காப்பாற்றிய கூழ் பாண்டியனை தங்கள் வயப்படுத்தி சமண ர்களை வேரோடு களைய தொடங்கினுர்கள் அப்போது கூழ்பாண்டி யன் திருஞானசம்பந்தர் இளமையாய் இருந்தபோது சைவசித்தா ர்த்தம் கோவில் வழிபாடு முதலானவைகள் சமணத்தின் முன் பிரகாசிக்கவில்லை திருவிளையாடல் புராணத்தில் சமணர்களை படல லத்தின் கவியால உணரலாம் பாண்டியன் தேவியும் மந்திரியும் சம்மந்தரும்சமணர்களை களைந்தேரியகூதினையும்ஆராய்ந்துசமணர் களை அடியோடு அழிக்கவேண்டும் என்றதும் மன்னன் சரி எனக் கூற எண்ணிறந்வர்களை அழிக்க வழி வகுத்து திருவீழிமிழலை பதி க்கத்தில் கூறினுர் இந்த திருஞானசம்பந்தரின் முன்பே சமணம் பரவி இருந்தது கி மு 525ல் தமிழில் சிறந்த நூல்களை தொல்காப் பியம் செய்த காலத்தே தமிழ் வேதங்கள் தொகுக்கப் படவில்லை என ஆசிரியர் நாச்சிக்கிளினுர் கூறுகின்றுர் ஆதலில் தொல்காப் பியரின் மூதலிலேயே சமணத்தின் கொள்கைகளாக சூத்ரம் வினை யின் நீங்கி விளங்கியவறிவின் முனைவன் கண்டது முத நூலாகும்

---

ஆரியர்களென்ற பிராமணர்கள் தொல்காப்பியர் காலத்தின் பின் தென்னகத்தில் குடியேறி தங்களுக்குள்ள ருக்வேதங்களையும் பல நூல்களை பதினென் புராணங்களையும் மாற்றியமைக்க முயன்றுர் கள் இவர்களில் ப்ரமுகாகள் நால்வாகள் மாணிக்கவாசகா சுந்த ரர் திருஞான சம்பந்தர் இவர்கள் பாடிய நூல்களுக்கு முதநூல் யாதும் இல்லை ஆதலால் இவர்கள் ஜைனர்களின் நூலானவைகளை கயாகரம் திவாகரம் பிங்கலம் நிகண்டுகள் தொல்காப்பிய இலக்க ணம் வளையாபதி சிலப்பதிகாரம் ஜிவகசிந்தாமணி இப்படி பல நூல்களின் கவினையும் மற்றும் நீதி நூல்களையும் கற்று தலைப்பில் சிவன் கணபதி இப்படி பலவிதம மாற்றியமைத்த வல்லவர் ஜைன ஸமத்தினின்று பிரிந்த அப்பர் மதம் மாறி அவர்களுடன் பல தொல்லைகளை செய்தான் இவர்களின் முன் பரம்பரையாக ஆசாரி யர்கள் இல்லை இவர்களின் இலக்கிய இலக்கணம் கி பி 700 பின் இயற்றியவை சில நூல்களுக்கு தமிழில் கருத்துக்களை மாற்றி

தேவாரம் திருவாசகமென்றும் இப்படி பல நூல்களை இயற்றினு ர்கள் மேலும் உண்மைக்கு புறம்பாக பெரிய புராணம் கந்த புரா ணம் திருவிளையாடற்புராணம் பலஊர் புராணம் முதலியவற்றை முன் சொன்ன ஆதாரங்களைக்கொண்டு செய்தவைகள் மேலும் பொருத்தமில்லாததையும் செய்தார்கள் பின் 1200 ஆண்டுக்கு பின் ஜைனனுயிருந்த பல்லவன் கூழ்பாண்டியன் பெட்டகவர்த னன் காலத்தில் சூது அதிகமானது அப்பர் சுந்தரர் சம்பந்தர் சங்க ராச்சாரியார் இராமானுஜர் காலத்திலும் நடந்தது மேலும் செஞ் சியில் அரசாண்ட துமால கிட்டப்ப நாக்கியர் காலத்தில் மந்திரி ப்ராம்மணன் பெண்ணை கேட்டபோது ஜைனர்கள் உயர்ந்தவர் குறிப்பிட்ட இடம் பெண் நல்ல அழகு என்று கூறிய போது அவர் கொடாமையால் சமணர்கள் கொல்லப்பட்டார்கள் முன்சொன்ன நால்வர் காலத்தில் ஜைனர்களை கொன்ருர்கள் கோவில்கள் தரை மட்டமாக்கப்பட்டன நூல்களை குவித்து எரித்தார்கள் இதில் தப் பிய ஒலசுவடிகளில் பல பிழைத்தது இந்தகுறளை ஏலாசாரியர் எழு தினுர் என பல ஆதாரங்கள் உள்ளன மேலும் பாணினி முனிவரு க்கு முன் ஷாகடாயனர் சாரியர் என்னும் ஜைனர் இருந்தார் ஷாகடாயனரின் சூத்ரத்தை பாணினி கையாண்டு இருக்கிருர் மற்றும் அகத்தியர் ஜைனர் என்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளன மேலும் ஜைனர்கள் உயர்ந்தவரின் பெயரை வைப்பது வழக்கம் உண்டு மற்ற இனத்தில் இல்லை அகஸ்தியப்ப நைனுர் என பலர் உள்ளார்கள் இந்த குறளாசிரியர் கி பி முதல் நூற்றாண்டில் தோ ன்றியவர் புத்தபிரான் கி மு 520 அவதரித்ததாக கூறுகிருர்கள் சிலர் 700ல் என்றுசொல்கிருர்கள் திருஞானசம்மந்தா சமணர்களை யும் புத்தர்களையும் நித்தித்ததுபோலவேெ தாண்டரடி ஆழ்வார்திரு மிசை ஆழ்வார்களும்நித்தித்திருப்பது வருந்தத்தககது ஆனலும்செய் தகை எழுத்து மாற்றியும் பதத்தை மாற்றியும் சரணத்தைய மாற் றியும் வைத்தது மிக தவறு ஏன்எனில் இருக்கும்அங்கத்தை குறை த்தோ அல்லது கூட்டியோ செய்த செயலால் மனிதன் எண்ணற்ற பிறவி வாழ்க்கை சக்கரத்தில் தவிப்பான் பலனை அனுபவிக்க உள் ளது உள்ளது போல் கூறுவதால் ஸமயத்தன்மை மாருது இருக்க உயர்ந்த கொள்கை உடைய தர்மத் தன்மை உள்ள உயர்ந்த நோ க்குடையதே இழிவு படுத்தி ஒழிபபது உயர்ந்ததாகாது நல்லவினை நன்னூலையும் நல்லோரையும் அழகுள்ளோரையும் அவர்களு டைய அங்கோபாங்கத்தை துண்டித்தத போலாகும் இவர் திரு த்தி எழுதுவது கற்பனைக்கு செம்மையாக தோன்றும் அது கடவுள் வாக்காகாது கயவனின் வாக்கு உள்ளதை உள்ளபடி கூறுவது

தான் (புராணம்) வேதம் இவர் இப்படி செய்திருக்கலாம் சமணக் கொள்கை கடினமானது பெண் பாசத்தை மனதிலும் கொள்ளத் கூடாது என்பதற்காக தம் இஷ்டப்படி நடக்கவும் பொய் கற்பனை சேர்த்திருந்தார்கள் தன்னை போற்றுவார்கள் எனவும் சிவனோ ப்ரம்மாவோ விஷ்ணுவோ இவர்களை கடவுள் என்பது பொருந் தாது இவர்கள் பெண்பித்தர்களாய் பெண்ணை விட மனமில்லை வை ஷ்ணவ மதத்தை சேர்ந்த பந்தஹரி என்ற உயர்ந்த புலவர் நீதி ஷதத்தில் கூறுவது அவரை வணங்காதே என்றார் கற்பனையால் நூல்களின் பொருளை பாதகமாக்கின்றார்கள் ஆதலால் யாரையும் வணங்காது உன்னை ஆட்டி வைக்கும் கர்மத்தை வணங்கு என் றார் திருவாளர் கா. சுப்ரமண்யம் பிள்ளை அவர்கள் வக்கீல் அவர்கள் சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகத்தார் பதிபித்த தொல்காப்பிய முகவுரையில் பாரத காலத்தின் முன்பே தொல்காப்பியர் நூல் செ ய்தார் என்று அடித்து கூறுகின்றாகள் மேலும் திருவாளர் இராம சாமி அய்யர் மற்றும் ஷேஷாத்திரி அய்யா அவர்களும் ஆங்கிலத் தில் எழுதப்பட்ட தென் இந்திய நூலில் மூன்றுவது பாகம் 33 பக் கத்தில் மகாநாமா என்பர் எழுதிய மகாவம்யம் என்ற சரித்திரம் உள்ளது இது இலங்கையை ஆண்ட பாண்டுகபயா என்ற அரசர் காலம் கி மு 437 ல் அனுராதபுரம் ஸ்தாயிக்கப்பட்டது என்று இங்கு கும்பத்தர் என்ற ஜைன முனிவருக்கு ஆலய வசதியை செ ய்து தந்தான் என்று கூறுகிறது ஆகையால் பத்ரபாகு முனியின் காலத்தின் முன்பே ஜைனர்கள் இருந்தார்கள் இந்த தொல்காப்பி யத்தை இயற்றியவர் ஜைனர் தான் என்று கூறுவது சரியே அவர் களில் யாழ்பாணம் சி வை தாமோதரம்பிள்ளை அவர்கள் கூறுவது இவா பின் சென்ற காலம் 1200 ஆண்டுகள் குறையாது என்கிறார் இதன் விவரம் வீரசோழியம் பதிப்பில் விரிவாக ஆட்சேபன நிரு ணயத்தோடு எழுதியிருக்கிறேன் அதை காண்க என்று எழுதியு ள்ளார் விஜயநகர கலாசாலை சரித்திர போதகர் ஸ்ரீ எம் எஸ் இராம சாமி அய்யர் ஜெனடிஜட்டில் எழுதிய விவரம் கி மு 297 ஆண்டு க்கு முன் ஜைனர்கள் தென் நாட்டில் இருந்தார்களென கூறினர் இதை நிர்ணயிக்க ராஜாவளி கதையை விட வேறு ஆதாரம் தே வையில்லை என்றார் இன்னும் பல பல சான்றுகள் உள்ளன திருக் குறளை இயற்றிய மஹான் குந்தகுந்தர் இவர் வக்ரக்ரீவர் ஏலாசாரி யா க்ரந்தபிச்சர் பத்மநந்தி என வல்லவர் பல நாமங்கள் இவருக்கு நிகர் யாருமில்லை என பல நாமங்கள் உள்ளன இந்த சைவ மதத்

தினருக்கு நூல்களே கிடையாது வல்லவரை வாள்ளுவராக காலபோக்கில் வள்ளுவர் என மாறியது ஜைனர்களின் நூலை பார்த்து காப்பி அடித்தார்கள் ப்ராம்மணன் சேக்கிழார் செய்த சூது சிலயிடம் கவியில் அருகன் என்னும் பதத்தில் (அ) வை நீக்கி முருகன் என்று (மு) வை சேர்த்தான் இப்படியே பரிமேலழகர் குறளில் எல்லாம் தலைகிழாக தேவையான இடத்தில் அர்த்திற்கு பதிலாய் தனக்கு ஒத்ததை செய்தார் இவ்வளவும் அந்தணன் சூழ்ச்சி தாங்கள் ஒருநவாக திகழ சைவர்களை கட்டுக்கதையால் தாழ்வாக்கி அவனை சூத்திரனென்று அவர்களால் வேதம் வேள்விகளை நடத்தச்செய்து ஜீவிக்க அவர்களை அடிமையாக்கி தாங்கள் ஆட்டிவைத்தவாறு ஆடுக்கின்றுர்கள் அந்தணன் செய்த செயலே புராணம் யாகம். வேதம் என்று அவர்களாலே பிழைப்பவர் இவர்கள் எழுதிய நூல்கள் எல்லாம் பொய்யும் புளுகும் கற்பனையாகும். இதை அம்பலப்படுத்தவே ஜைனர்கள் கொலையுண்டார்கள் அந்தணர் பிழைக்க அஜயாகம், பஷுயாகம் அஷ்வயாகம் இப்படி பலதை செய்யசொல்லி அப்பாவி சைவர்களை தேஹீஷம். யஞ்யம் செய்யசொல்லி அதனுல் கிடைக்கும் பலஆயிரம் பலப்பல பொருளை தின்று வாழ்பவர்கள் இதைகண்டித்து அஹிம்ஸா முறையை கையாளும் ஜைனர்களையும் 780 கோவில்களையும், எண்ணற்ற நூல்களையும் தீக்கிரையாகின்னார்கள் சைவம் என்று சொல்லப்பட்ட பல இனத்தார் ஜைன சமயத்தை சேர்ந்தவாகள் இல்லை என்றுல் இவர்கள் வாழவழி உண்டு இதிலும் சில உத்தம அந்தணர்கள் அன்றும் இன்றும் உண்மையை உணாந்து கூட்டுசேரா கொள்கையினராக இவ்வித தீய செயலை செய்ய மனமிலலாதவராய் படித்து பட்டம் பெற்று விவசாயம் செய்தும் ஜீவிக்கின்றார்கள் ஊரிலுள்ளவன் தவறு செய்தால் அந்த ஊர் பெயரே கெடுவதுபோல், இவர்கள் இங்கு அழித்ததைப்போல், கர்நாடகத்திலும். 5 கோவில்களை சைவமாக்கி பரவ செய்தார்கள், வடக்கிலும், சமஸ்க்ருத நூல்களை அரசன் உதவியால் எரித்தார்கள். கிரிஷ்டியன், மஹமதியன், சமணம், புத்தம் இவைகள் நீங்கலாக வன்னியா, முதலியாா, செட்டி, கோமுட்டி குழவன், தட்டான், ஜோயி, குருவி, குடுகுடுப்பை நாவிதன் தச்சன். கருமான், சேணியன், வாணியன் இப்படி இன்னும் பலரை அந்தணர்கள் தம் கைகொண்டு அவர்களை சூத்தரன்என அவர்களை தூரநிற்கசெய்தாாகள்அவாகள் அப்பாவிகள் அவாகள் இவர்களை சாமிஎன்றுகூறி வணங்குவார் இவர்கள் அனைவரையும்

ஏமாளிகளாக்கி விரும்பிய சாமான்களை வரவழைத்து யாகமென வேடிக்கையால் பல ஆயிரம் பெருமானதை அடைந்து பங்குபோடு கின்றூர்கள். இந்த வைஷ்ணவர்கள்செய்யும் சூதுக்கு சிவனைதழுவிய வர்கள் சைவர்என பரப்பி ஏப்பம் விடுகிறூர்கள். தாஜ்மஹாலில் அந்தணனுக்கு என்ன வேலை அவன்யார் இவன்யார் வைணவர் இப்போது சைவத்தை தழுவி வாழ்வு நடுத்துகின்றூர்கள் எல்லாம் ஏமாற்றுவேலை சிவம் என்பது மோக்ஷம் அழிவில்லாதது நிரந்தர மானது நித்யானந்தமானது அறிவு களஞ்சியம்மானது கல்யாண ரூபமானது தேஜோமயமானது இதுவேசிவம் அந்தசிவததை தநாடி ப்போகிறவன் சிவபதத்திற்குறியவன் சிவனுக பெயர்கொண்டவன் பெண் வலையில் வீழ்ந்தவன் காமகோபத்திற்கு கட்டுப்பட்டவன் சிவம்என்னும் பதத்திற்கு இழக்கைதேடியவன் பரிதாசி என்பான் பிச்சை எடுக்க காவி உடுத்தியவன் ப்ரம்மச்சாரி) மணவியை வெ றுத்தவன் இவனேகானகம் சென்று தவம் செய்கின்றவன் எல்லாம் வெருத்தவர் கமண்டலம் நூல்கள் ஜீவனைகாக்க தகுத்ததை மட் டும் கொண்டு வேறதுவும் விரும்பாமல் இல்லாமல் எல்லாம் துறந்த வர் யோகி முனி ஸாது என்று பெயர் இந்த கொள்கை உள்ளவர் யாவராயினும் க்ரோதம் மானம் மாயை லோபம் முதலானவைகளை விட்டவர் யாவராயினும்சரி இவர்கள் தன்ஒழுக்கத்தால் பசி பிணி தாகம் ராகம் த்வேஷம் பிறப்பு இறப்பு பயம் கர்வம் தூக்கம் வியர் வை கிழத்தன வீசனம் மதம் இப்படி பதினெண் குற்றங்கள் கடவு ளுக்கு கிடையாது இவைகள் இல்லாதவரே கடவுள் அவர் சம்பு சங்கரன் புத்தன் வர்த்தமானன்கஷவன் சிவன் ஹரி ந ராயண ன் விஷ்ணு எந்தபெயராலும் சரிஅவரேகடவுள் பெண்பிள்ளைக ளுடனும் வாழ்பவன் கோபத்திற்கு ஆளானவன் பிறருக்கு தொல் லை தருபவன் தந்தவன் சபிப்பவன் மாது மதுவை சேவிப்பவன் துராசாரி அனைவரையும் சமமாக நினைக்காதவன் பிறரை துன்புறுத் துபவன் துன்பத்திற்கு வழி கோலுபவன் கபட துராசாரி.முனி என் பவனுக்கு கோபம் வரக்கூடாது தொல்லை மிகுந்தபோது வரும் மனிதர் தானே இந்த திருக்குறளாசிரியர் எலலாம் அறிந்தவர் எவராலும் இவரை வெல்ல முடியாது வல்லவராய் விளங்கினூர் இந்த பெயர் கொண்ட இவரை திருவல்லவர் என்பதற்கு வள்ளு வர் என பெயர் வைத்தார்கள் 58நூல்களை எழுதினூர் இந்தஜைன மதம் அனுதியானது என உலக பெருமக்களின் அபிப்ராயம் காண லாம் இவர்கள் வித்வான்கள் இந்த விசாலமான சமஸ்கிருத சாகி த்யம் ஆகம நூல்கள் கல்வெட்டுகளால் புலப்படும் இது விருத்தி யடைந்ததை கண்டு என் மனமும் ஆனந்தத்தால் விருத்தி அடை கிறது என்றூர் ஜெர்மன் நாட்டு டாக்டர் ஹெர்டல் என்பவரின் வார்

த்தை

2. ஜைன தரிசனம் ஒரு சுதந்திர தரிசனம் இது மூல தர்மம் என்று நான் கண்ட ஆதாரத்தால் நிச்சயம் சொல்வேன் இது மற்றதை விட வேருனது உயர்ந்தது இது புராதனமான பாரத நாட்டின தத்வம் தார்மீகத்தையும் பயில மகத்வபூர்ணமானது ஜெர்மன் டாக்டர் ஹெர்மோன் ஜெகோபி

3. ஜைன மதம் தரும் உண்மைகள் மிக மிக பழமையானதும் வைதீகமும் ஹிந்து தர்மம் போல இல்லை இது தனிப்பட்டது இது பாரத நாட்டின் மேம்பாட்டிற்கும் தத்வஞானத்திற்கும் முக்ய சாதனமாக பெயர் பெற்றது பிரமுகர் ஜவஹர்லால நேரு

4. ஜைன தர்ஷனம் மிக உயர்ந்த நிலையில் உள்ளது இதன் தத்வங்கள் விஞ்ஞான ஆதாரப்படி உள்ளன எவ்வளவுக்கெவ்வளவு பொருள்கள் முன்னேற்றமுள்ளதோ அவ்வளவு ஜைன தர்மம் வலிமையை அடைந்து வருகின்றன
டாக்டா எல் பி டெஸிடோரி இடாலி நாட்டார்

5 ஜைன தர்மத்தின் தோற்றமும் இதன் சரித்திரம் ஸ்மிருதி நூல் அதன் வளர்ச்சி முதலானதால் இது பழமையானது ஹிந்து தர்மம் முற்றிலும் மாறுபட்டது குமாரஸ்வாமி சாஸ்திரி.
இவர் காலம் சென்ற நீதிபதி சென்னை நீதிமனறம்

6. உலக ப்ரசித்தி பெற்ற வித்வான் ஜார்ஜ் பெர்னட்ஷா கூறுவது ஜைன மதத்தின சித்தாந்தம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது என் மரணத்தின் பின் நான் ஒரு ஜைன குடும்பத்தில் பிறக்க வேண்டும் என்பதே என் ஆசை என தேவதாஸ் காந்தியிடம் கூறினர் இவர் இந்த நூல்களிள் அறிவால் தூய்மையான உணவையே உண்டு வந்தார் இவர் கள் காரம் புலால் லாகிரி வஸ்துகளையும் விட்டார் ஜார்ஜ் பெர்னண்ட்ஷா

7. உயர்ந்த ஆசாரங்கள் விசாரங்கள் நிறைந்த உன்னத நோக்கமுள்ள தவகிரியைகள் ஜைன தர்மத்தில் நிறைந்துக் காணப்படுகின்றன இதன் துவக்கத்தை காண முடியாதுபோல் இருக்கிறது மேஜர் ஜனரல் பர்லாங்

8. இந்த ஜைன தர்மம் உலகிற்கு அஹிம்ஸை என்ற உயர்ந்த பண்பாடான தர்மத்தை உலகிற்கு அளித்துள்ளது வேறு எந்த மதமும் அஹிம்சையையும் இதன் கோட்பாட்டையும் வேறு எந்த மதமும் இவ்வளவு தூரம் வலியுறுத்தியது இல்லை வகுக்கவும் இல்லை

விஷ்வதர்மாவதற்கும் அணவற்கும் இது தகுந்தது
டாக்டர். ராஜேந்திர ப்ரசாத் ராஷ்ட்ரபதி

9 ரிக்வேதத்தில் பகவான் ரிஷபரை குறிக்கும் மந்திரம் காணப்படுகிறது 101 21 26/ல் இது அனாதிகாலம் தொட்டுள்ளது ஏனென்றால் அருகன் இதம் தயவே விஸ்வமயம் என்ற சூத்ரமென்று வேதங்களால் (புராதனம்) பழமையானது என தெரிய வருகிறது ப்ரொபசர் விருபாக்ஷி எம் ஏ. வேத தீர்த்த என்பர் கூறியது

10 கன்னட நாட்டில் ஒரு ஜைனர் பழமையானதும் மேன்மையானதுமான இலக்கியங்களை இயற்றிய பெருமை ஜைனர்களுடையது இவர் பெயர் காணலாம் ராவ் பகதூர் நரசிம்மாசாரியரின் சான்று

11 இதே கன்ன நாட்டின் பெரும்புகழ் வாய்ந்த கபவிரசரின் பல நூல்கள் நல்ல பெயர் பெற்ற அற நூல்களை இயற்றினர் இது பல கோடி ஜனங்களால் புகழத்தக்கது ரத்னகர் என்ற வித்வான் ஆவார்

12 ப்ராமண தர்மம் இந்துக்களின் தர்மமாக மாறுவதற்கு வெகு காலம் முன்பே உன்னதமான ஜைன தர்மம் இதே தேசத்தில் இருந்தது எனறு தற்போது நடத்திய சரித்திர ஆராய்ச்சிகளாலும் எண்ணற்ற கல்வெட்டுகளாலும் புதைப் பொருள்களாலும் செப்பேடுகளாலும் உண்மை தெளிவாகத் தோன்றுகின்றது
நீதிபதி ரிங்கலேகர் பம்பாய் உயர்நீதி மன்றம்

13 மொஹஞ்சதாரோ பழைய சிலாசாசனங்கள் குகைகள் பல பழைய சரித்திரம் பலகட்டிட தோற்றங்களால் ஜைனம் மிக பழமை என உண்மை தெரிகிறது வேதாத்தியர்களைவிட ஜைனம் பழமையானது என்று உணர்கிரேன்
டாகடர் ஸ்வாமி ராம மிஸ்ரேஜி சாஸ்திரி பனரஸ்

14 வேதங்கள் எழுவதற்கு முன்பே ஜைன சமயம் இருந்தது என நானறிந்த ஆதாரங்களால் கண்டதில் வியப்பில்லை
டாக்டர் ஸர் எஸ் ராதாகிருஷ்ணன் உபராஷ்டிரபதி

15 மேல் நாடுகளில் ஜீவ வதை செய்வது சாதாரணமாகிவிட்டது மனிதன் மனிதனை வதைத்து கொல்கிறன் இதைப் பற்றி அவன் கவனிப்பதில்லை ஆனல் ஜைன தர்மம் எல்லா ஜீவன்களையும் காப்பாற்ற துடிக்கிறது இதனல் இது ஒப்பற்ற தர்மமாக சிறப்புடன் இருக்கிறது ஜைனர்கள் உண்பதிலும் தின்பதிலும் நடக்கும் போதும் ஜீவன்களுக்கு தொல்லை நேராதபடி கவனி

த்து செல்கின்றுர்கள் இவ்விதம் இவர்கள்கடைபிடிக்கும் கொள்கை உயர்ந்தது இவ்வித கொள்கையை எந்த மதத்திலும் பார்க்கவில்லை டில்லி பொதுமேடையில் பேசிய 4-5-53ல் அமெரிக்க பெண் மாது

16 ஜைன சாதுக்கள் யாவரும் போற்றககூடிய வாழககையை நடத்துகின்றுர்கள் ஜைன சாதுக்கள் விரதம் நியமம் முதலானதை கடைபிடித்து உலகில் ஆத்ம ஸ்வருத்தை நன்ருக எடுத்து விளக்குகின்றுர்கள் இதனுல் இல்லற தர்மத்தை நடத்தும் கிரஹஸ்தனுடைய பண்பு தோஷமில்லாதது இதனுல் பாரத நாடு அவனை அபிமானத்தோடு பாராட்ட வேண்டும்

டாக்டர் சதீஷ்சந்த வித்மா பூஷண எம் எ பி எச் டி கல்கத்தா

17 சாஸ்திரங்களாலும் வ்யாக்யானங்களாலும் சான்றுகளாலும் ஜைன தர்மம் அனுதியானது என்று தெளிவாய் தெரிகிறது இது வாதமற்றது பேதமில்லாதது இதில் ஒழுக்கத்தின் சிகரமுள்ளது ப்ராணமூடையது லோகமான்ய பால கங்காதர திலகர்

18 உலகத்தில் எல்லா ஸமயத்தைக்காட்டிலும் ஜைன சரித்திரம் மிகவும் உயர்ந்தது உபயோகரமானது இது சரித்திரம் எழுதுபவர்களுக்கு பழைய கல்வெட்டுகள் ஸாசனம் ஆகியவைகளின் உண்மையை அறிய விரும்புகிறவர்களுக்கும் பேருதவியாய் உள்ளது

டாக்டர் சதீஸ் சந்திர வித்யா பூஷன் எம் ஏ பி எச் டி கல்கத்தா

19 ஜைனர்கள் உலகிலுள்ள ஜ்னங்களுக்கு உபகாரம் செய்யவே விஸ்தாரமான பெரிய இலக்கியங்களை இயற்றியுள்ளார்கள் ஜைன தர்மத்தின் நோக்கம் அனைவரும் கற்று நல்வழியில் நடைபயில உதவியாகும் ப்ரொபஸர் ஜொஹானன்னஸ் ஹெர்டல்

20 விஸ்வஷாந்தி ஸ்தாபனத்தின் பிரதிகளை முழு உற்சாகத்து வரவேற்கும் அதிகாரம் ஜைனர்களுடையது எனென்றுல் அஹிம்சா மத்திரமே விஸ்வசாத்தியின் சாம்ராஜ்ஜிய பதவியை உண்டு செய்ய வல்லது இந்த உலகிற்கு ஒப்பு உயர்வற்ற அஹிம்சை கொள்கையை ஜைன தர்மபோதகர்களாகிய (தீர்த்தங்கரர்)அறபோதக பரமாத்மாக்களான மோக்ஷ காமிகள் அருளினாகள் ஆகையால் விஸ்வசாந்தியை ஆதிபகவான் முதல் கொண்டு 24மகாவீரர்வரை வந்தவர்களல்லாது வேறு யாரால் அற உரைமண்டபத்தில் பாதம் படாமல் செய்ய முடியுமா? இதன் பொருட்டே கால்நிலம் தோயா கடவுள் என்றுர்கள் டாக்டர் ராதா விநோதபால்

21 இந்தியாவின் பாரத நாட்டில் மஹாவீரரின் தர்மம் நிச்சயமானதென்றும் சாமாஜீக வாதமிலலை என்றும் போதித்தார உண்மைத்தர்மம் சத்தியமே ஆகும் வெளிசடங்குகளை அனுஷ்டிப்பதால்

முக்தி அடைய முடியாது. மனிதருக்கு தர்மம் உயர்ந்தது, வித்தியாசம் பாராட்டக்கூடாது

22 காலஞ்சென்ற கவி ரவீந்திரநாததாகூர் தற்காலத்தில் பகவான் மஹாவீர ஸ்வாமியினுடைய பெயர் பிரசித்திபெற்றிருப்பதற்கு காரணம், அவர் போதித்த அஹிம்சையே என்று நான் விசுவாசத்துடன் கூறுவேன் யாராவது அஹிம்ஸா தத்துவத்தை மிகவும் அதிகமாக ப்ரகாசிக்க செய்திருந்தால் அந்த தர்மம் மஹாவீர ஸ்வாமியினுடையதாகும் மஹாத்மாகாந்தி

23 ஜைனன் என்னும் பதம் புலன் அடக்கத்தாலும் அஹிம்சையால் ஆத்மாவின் சக்தி உயர்ந்து கர்மம் விடுபடுவதால் வென்றதால் துவேஷம்-மானம்-மாயை லோபமில்லை வினையினை நீக்கியவன ஜினன் நீக்குபவன் ஜைனன் உலகம்பூராவும் தர்மத்தை பரவச்செய்வது ஜைனர்களின் கடமை சர்தார் வல்லபாய்படேல்

24 யஜுர்வேதத்தின் கருத்து அத்தியாயம் 19 மந்திரம் 14. ஓ அருகனே, நீ வஸ்து ஸ்வருபமாகிய அம்பையும்உபதேசமான வில்லையும் நான்கு கடையிலா ஆத்மகுணங்களை அனிகலன்களாக கொண்டுள்ளாய் ஓ அருகனே நீ விஸ்பஸ்வரூபமான கேவல ஞானத்தை அடைந்து விட்டாய் நீ இவ்வுலகிலுள்ள ஜீவன்களை ரக்ஷிக்கிருய், காமாதிகளை வென்ருய் உனக்கு நிகரான எந்த பலவானும் இல்லை வசிஷ்டர் உனக்கு என்னதேவை என்றபோது வாசிஷ்டம் அத்தியாயம் 15. ஸ்லோகம் 8-ல் ராமர் கூறியது நான் ராமனில்லை எனக்கு பொருள்களின்மேல் ஆசை இல்லை. நான் ஜினனுக்கு சமானமாக என்னுடைய ஆத்மாவை சாந்தியில் ஸ்தாபிக்க விரும்புகிறேன் இதோகவி நரஹம்ராமோ நமே வாஞ்சா

25 பரரேஷுச நமேமன சாந்தி மாஸ்தாது மிச்சாமி ஸ்வரகமன் ஏவஜீநோயதா அக்பருடைய சபையில அபுலபசில கூறியது

26 அசோக சக்ரவர்த்தி காஷ்மீரம் வரையில்ஜைனதர்மத்தை பரவச்செய்தார்

27 டிஸ்கவரி ஆப் இந்தியா என்னும் நூலில் பிரதமந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு கூறியது யாதெனில் ஹிந்து தர்மம் பாரதீய தாமத்தில் ஒரு அம்சம் ஜைனதர்மம் பாரதீய தர்மங்களாகும் இது ஹிந்து தர்மமல்ல

28 லோகமன்ய பாலகங்காதரதிலகர்

பகவான் மஹாவீர ஸ்வாமி ஜைனதர்மத்தை மறுபடியும் பிரகாசிக்கச்செய்தார. இவர் 24வது அவதார்புருஷர் இவருக்குமுன் 1-வது ரிஷபர் 22 நேமி 23 மூன்ருமவர் பாரீஷ்பர் 24 மஹாவீரர் அவதார புருஷர்கள் தோன்றினர்கள் இந்த 24 நால்வருக்கு முன்னமேயே, ஜைனதர்மம் இருந்தது அதாவது 1 கோடான கோடி ஆண்டிற்கு முன்னமேயே ஜைனம் பழையதென தெளிவாகிறது

29 கானத்த மாசிக - புராதத்வ ஆச்சாரியார் கூறுவது இந்தியாவில் ஏதாவது ஓர் இடத்தை மையமாக வைத்துகொண்டு 10 மைல் நீளமுடைய இடத்தை ஒரு வட்டத்தை வரைந்தால் அதில் நிச்சயமாக ஜை சின்னம் கிடைக்கும்

30 பேராசிரியர் பாணிபூஷண அதிகாரி காசிவிஸ்வவித்யாலய ஸ்ரீசங்கராசாரியர் ச்யாத்வாத கொள்கையை சரியாகபுரியாமல் நிய மமில்லாமல் கண்டித்தார் இவர்பின் வந்தவர்கள் அனேகர்கள் நம்பினர்கள் இவர்கள் மூல நூல்களை அறிந்திலார்போலும் இத ஞல் குறைகண்டார் பலசமயத்தாரல்தான் உண்மையை அறிய வாய்ப்புண்டு

தமிழகத்தில் பெயர்பெற்ற தலைவர் அண்ணதுரை பல ஆதாரங்களுடன் தலைசிறந்து நிற்கும் ஜைனமதம் பழமையானது புகழத்தககது இதை எண்ணற்றவர்கள் உணர்ந்துள்ளார்கள் பலரால் பரராட்டுக்குறியது அண்ணதுரை முன்னாள் தலைவர் சிறந்த கொள்கை கடைபிடித்து நடக்கிறோம் என்று தங்களைப் போற்றி கொள்ளும் அஹீம்சா சத்தியம் சௌர்யம் - ப்ரம்மசர்யம் என தன்மத சிறப்பினைக் கூறுபவர்களான நீங்கள் தூய்மையான ஜைனர்களை கொலை செய்யலாமா? உகந்ததா இது சைவத்திற்கு தகாத செயல் என முன்னாள் ப்ரதம மந்திரி கருணாநிதி கூறியிருக் கிறார்

சிவபுராணத்தில் கவி

அருகன் இதிதன்னுமதேயம் பாபப்ரணஷனம்

பவத்விஸ்சைவகர்தவ்யம் கார்யம் லோககசுகாவஹா

அருகன் என்னும் பதம் சுபபெயரானது பாபத்தை போககவல்லது உலகுக்கு சுகத்தை தரவல்லது இந்தநாமத்தை நீயும் உச்சரிப்பாய்

சிவபுராணம் கைலாஷே பர்வதே ரம்யே வ்ரஷபோயம் ஜிநஷ்வர :

க்ஷகாரா ஸ்வாவதாரம் சஸர்வக்ஞ ஸர்க சிவ:

இந்த சர்வக்ஞனை விரஷபதேவர் மனோஹரமான கைலாய பர்வ தத்தின் மிசை எழுந்தருளினார்

இவருக்கு தகப்பன் நாபிராஜன் - தாய் மருதேவி இவர்களுக்கு

கவி நாபிஸ்தவ ஜநயத் புத்ரம் மருதேஸ்வரம் மனோஹரம

வ்ரஷபம் க்ஷத்ரிய ஜேஷ்டம் சர்வக்ஷத்ரஸ்ய பூர்வஜம்

இவர் க்ஷத்திரியரில் முதன்மையானவர்என்றும் கூறப்பட்டுள்ளது

இந்த வ்ரஷபருக்கு பரதன் முதலான நூறுபோகளை பெற்றார் என்றும் இவர்களில் முதல்வனை பரதனுக்கு பட்டமளித்து துரவு கொண்டார் என சிவபுராணத்தில் உள்ளது

கவி: நாகபுராணத்தில் அஷ்டஷஷ்டி ஷுதீர்தேஷு யரத்தராயாம்

யத்பல பவேத ஆதிநாதஸ்யதேஸ்ய ஸ்மரானே நாபி

தத்பவேத்

அறுபத்தெட்டு திர்தத்தை வழிபடுவதில் வரும்புண்யம் ஆதிபக வானை வழிப்பட்டு வருவதில் உண்டு

## சோவியத் நாடு 1972 பக்கம் 27ல்

ஜெர்மன் வரலாற்றுத்துறை பேராசிரியர் டாக்டர் ஹென்ரிரஜிம்மர் எழுதிய நூலில் இந்தியாவின் தத்துவங்கள் என்ற நூலில் ஜைனர்களின் (சமயம்) மதம்மிக்க தொன்மை வாய்த்தது உண்மையான தும் ஆராச்சியாலும் காணும்போது உண்மை புலப்படுகிறது

மற்றொரு மேல்நாட்டு அறிஞர் உண்மையை வலியுருத்துகிருர் மேஜர் ஜெனரல் ஜே சி பர்லாங் என்பவர் தி ஷார்ட் ஸ்டெடி ஆப்காம்பார்வ் ரிலேஜின் என்ற நூலில் ஆரியர் வருமுன் திராவிடரின் நாகரீகமான ஜைனர்களின்நாகரீகம் செழிப்புடன வளர்ச்சியுற்றிருநதன என்கிருர் / இதை மத்தியசர்க்காரின் நிதியமைச்சர் காலம் சென்ற திருசர் R K. சண்முகம் செட்டியார் கூறுவது விதண்டாவாதம் கிளப்பினுலும் திராவிட சமயம் ஜைனசமயமாவே இருந்தது இது நம்மை மகிழ்ச்சியில்லாழ்த்தி விழிப்புற செய்கிறது இவர்கள் இந்த நல்லகொள்கைகளை பரதமெங்கும் ஆக்கபூாவமாக பேணிகாத்து வருகின்ருர்கள் இவர்களின் கொள்கை உயர்ந்தது / மேனுட்டு அறிஞர் நோயிஸ் ரெடிங் என்பவர் பலி இடுவதையும் அதை தடுப்பதையும் அரசர்களின் காலத்தையும் நடநீத ஆட்சியும் பார்த்து ஆரியர்களுக்கு அச்சுருத்தலாகவே இருந்தது பகை மூண்டது ஜைன அரசர்களை சைவசமயத்தை தழுவ செய்தார்கள் என்பது உண்மை

இதையே மேனுட்டு ஜிம்மா என்பவர் உறுதி படுத்துகிருர் அப்போது கி. மு 5-ம் நூற்ருண்டில் ராஜா சந்ரகுப்த மௌரியனை சொல்லலாம் என்கிருர் இந்த சமயத்தில வலலவரான குந்தகுந்தர் கி பி 1)ம் நூற்றண்டில் திராவிடரான ஜைனர்களுக்கும் பிற சமயததாருக்கு பொருந்தும்படியான திருக்குறளை எழுதிபரபபினா திராவிட சங்கத்தை உண்டாக்கினார் இதே சங்கத்தை 4-ஆம் நூற்றாண்டில் வஜ்ரநந்தி முனிவரால் புத்துயிற்பெற்று வளர்ந்தது மீண்டும் சகலமும் அறிந்த வித்யாலங்கார பேராசிரியர் S K. ராம சந்திர ராவ் அவர்களின் சான்று திராவிட ஜெயினர்களை ஆக்கத தறகும மேன்லமக்கும் உாய பல்வேறு கலைகளையும் படைத்து சிறப்பித்து தந்த மஹான்கள் இந்த தூய அறவோாகள் சிந்தனை சிற்பிகள் அறிவியல் அறிஞர்கள் இலக்கியமேதை இலககண விஞ்ஞானி கணித நிபுணர்கள் நீதிநூல் வல்லுணாகள். அகராதி அமைப்பாளர்கள். இசை நூல் ஞானிகள், ஈாடடியநாடக நூல்களின் கலைஞாகள். தர்க்க நூல் வித்வானகள். ஓவியபுலவர் சிறபக்கலை செல்வர்கள் ஜோதிட நூல்களின் செம்மலகள், சதக நூல் சமர்தாகள். அறிவியல களஞ்சியககாவலாகள் ஞானக்கடல் தூப நெறியாளாகள வைத்திய பொக்கிஷங்கள் சமணர்கள்

புராணக் குறிப்புகள் பல சிவபுராணம் பக்கம் 37ல், லிங்க புராணம் 57. அக்னி புராணம் 353 அத்தியாயம், மார்கண்டேய புராணம் 54-59ம் கவியில் பிரம்மாண்ட புராணம் (1, 2 அத்தியாயம் 14 பக்கம்) வாயுபுராணம் (9. 30, 50, 53)நாரதபுராணம்

48 அத்தியாயத்தில் ஸ்கந்தபுராணம் (கௌமாரகண்டம் 37/5) ஸ்ரீமத் பாகவதம் ஐந்தாம் ஸ்கந்தம் சார்த்தனுகநா பாகவதம் (2 44/45) காலத்திலும் ஆதிபகவான் ரிஷபரின் மகன் பரத சக்கரவாத்தியின் பெருமையும் பகவான் விஷயமும் உள்ளன கல்வெட்டைப் பற்றி ரஷ்ய அறிஞர் ஸி நெரோஸ்கை எம் எஸ்ஸி அவர்களின் கருத்து மொழி கலாசாரம் வரலாற்றுக்கு முக்கியத்வம் வாய்ந்த மூடிவாகும் இதனல் வடமேற்கு இந்தியாவில பண்டை காலத்தில் வாழந்த திராவிடர்கள் ஜைனர் என்பது உண்மை யானது நெடுங்காலமாக உள்ளது ஆதாரசான்றுக்கள்

பாரத நாட்டு ஜனதிபதியாக இருந்த டாகடர் ராதாகிருஷ் ணன் இந்தியன் பைலாசிபி என்ற ஆங்கில நூல்கள் வ்வரஷப-தேவர் ஜைனமத ஸ்தாபகர் என்பதை பாகவதபுராணம் ஆமோ திக்கிறது மேலும் யஜுர் வேதத்தில் பகவான் ரிஷபதேவர் அறித் 22 அரிஷ்ட நெமிலி இவர்களின் பெயரை கூறுகிறது ஆகவே ஜைனம் அனுதியாக உள்ளது டில்லியில் பசிய பெண்மணியின் தேதி 4-5-1953ல் ப்ராமணர்கள் நீக்கி விட்டார்கள் அவைகள் 24 தீர்த்தங்கரர்கள் 12 சக்ரவர்த்திகள் 24 யக்ஷன் யக்ஷிணிகள் இப்படி அமர கோஷத்திலுள்ள கவிகளை நீக்கினுர்கள் இந்த கவி மொத்தம் 1535 கவிகள் இதோடு 72 கவிகள் சோத்தால 1607 ஆனுல் இதில் 72 இல்லை ஆயினும் இடைஇடையில் உள்ள பக வான் பெயரை நீக்கினுர்கள் இவாகள் செய்த தவறுக்கெல்லாம் தமிழில் ஓலை சுவடி உள்ளது சைவர்களுக்கென எங்காகிலும் பழங் கால கல்வெட்டு ஏதாவது தற்போது உள்ளதாகவே வைத்துப் பார் ப்போம் 2500 ஆண்டின் கலவெட்டு கற்குகை சின்னம் அரச பர ம்பரை ஆசாரியாகள் பரம்பரை சகலமும் சமணத்தில் நிறைய உண்டு இப்போதுள்ளவாகள் மாற்றியமைக்கும வழி கண்டுபிடித் தவர்கள் ப்ராமணன் செய்ததே சைவனுக்கு வேதம் உண்மை மறைத்து வாழ வழி வகுத்தவர் திருக்குறளுககு உரை எழுதிய பரி மேலழகர் கண்மூடித்தனமாக பொருள் தெரியாது எழுதினுரோ என்னவோ பொருள் ஒன்று இருக்க கூறுவது ஒன்று ஜைனன் கூறும் குறள் பொருளை சைவர்களால் பூர்ணமாக கூற முடியாது காப்பி அடித்தாலும் சரியாக காப்பி அடிக்க ஜைனநூல் அவ்வளவு எளிதல்ல ஆழ்நத கருத்துள்ளது பல பொருள் கொண்டது பல மொழிகளில் மொழிபெயாச்சி செய்வதால் அவர்கள் அவர்களுடைய சமயத்தை சார்ந்தவர்கள் என்னுடையது என்று கூறிககொளகிரு ர்கள் இது தமிழகத்தைச் சார்ந்த நூலாதலால் சைவசமயத்தினா தமிழில உள்ளதை திலலுமுல்லு செய்து பல இடத்தில் பொய் கற்ப னையை ஜோடித்திருக்கிருர்கள் ஒரு கவியின் பொருளை விளக்கும் போது விகல்பமாக மறு பொருள் கூறியுள்ளார்கள் இது ஆதிபகவா னைத் தவிர பிரம்மா சிவன் விஷ்ணு இவர்களை குறிப்பது பொருத்த மற்ற செயல் இந்த மூவரையும் ஆக்கல் ரக்ஷித்தல் அழித்தல் என்

னும் கர்த்தாக்கள் எனவும் அதிகாரம் செலுத்த வல்ல வல்லமை பெற்றவராகவும் கூறிக்கொள்கின்றுர்கள் பகவத் கீதையின்படி யாரும் யாரையும் ஆக்கல் ரக்ஷித்தல் அழித்தல் கிடையாது முடி யாது கவி: இதோ நக்ருதத்வம் நகர்மாணி லோகஸ்யஸ்ரஜத்விபு

நகர்ம பலஸம் யோகம் ஸ்வாபாவாஸ் ப்ரவர்த்தே

தான் செய்த நல்வினை தீவினைக்கேற்ப நடைபெறுகிறது ஆக்கல் அழித்தல் இல்லை இதேபோல் பர்த்நஹரி கவி வைண மதத்தை சாந்த இவர் ப்ரம்மா விஷ்ணு மஹேஸ்ரன் இவர்களை வணங்கி யாதொரு பயனும் இல்லை உன்னை ஆட்டி படைக்கும் கர்மத்தை வணங்கு என்கிருர் இந்த மூவரும் காமுகர்கள் பெண்பாசம் கொண்டவர்கள் இவர்களை கடவுள் என எப்படி கூறமுயும் இப் படி தமிழகத்தில் உள்ளதை தரக்குவாக்கினர் வடமொழியில் உள்ளதை யாரும் ஒன்றும் செய்ய முடியவில்லை அதிலுள்ளசான் றும் தமிழகத்தில் எஞ்ஜியுள்ள நூல்களால் கண்ணடிபோல் தெரி கிறது இவர் தமிழகமல்லாது உலகம் போற்றும் மஹான் குந்த குந்தர் ஏலாசாரியார் என பல நாமங்கள் உள்ளன இன்றைக்கு 2000 ஆண்டுகள் கடந்தன. கி மு முதல் நூற்ருண்டிலேயே தோன்றினா பல தமிழ் வித்வான்கள் பாரபக்ஷமில்லாமல் திருக்-குறளாசிரியர் சமண துறவியே என்றும் பலநூல்கள் கூறுவதைப் போல் இவர்களும் உண்மையை கூறினர்கள் இவர்களின் பெயர்கள் வருமாறு ஸ்ரீமான் 1-உத்திரகோடீஸ்ரர் 2 ஸ்ரீமான் ஹயவதனராவ் 3 ஸமயதிவாகர முனிவர் 4 பவணத்திமுனிவர் 5 திருதக்கதேவர் 6 அம்ருஸாகராமுனி 6 குணாஸரசுரர். 8 தொலகாப்பியர் 9 பவணதநதி முதலவழிசார்பி காட்டிய நூலில். 10 பரம்பனுர் 11 இறையனுர் 12 இளம்பூணர் 13 அவிநயனுர் 14 நாற்கவிராஜநம்பி 15 தன்னுலாசிரியர் 16 பவணநந்தியால இயற்றிய இலககணநூல் முதலவழிசார்பில் காட்டியநூல இந்த 16ல் முதல் 2 தமிழ்வித்வான்கள் இதுபோக 14 பேர்களும் 15 வாமனமுனிவரும். 16 ஸமயதிவாக்ரமுனிவர் ஜைனர்கள்தான் இவர்கள் கூறுவது மிகவும் உண்மை இவர்கள் தவராக அச்சிட்டாலும் நம் வசமுள்ளதை மாற்ற முடியுமா நம் வசமுள்ன திவாகரம் 2 பிங்கலந்தை, 3 சூடாமணிநிகண்டு 4 யாப்பெருங்கலம் 5 வெண்பாட்டியில், 6 அகப்பொருள்விளக்க நூல் இலக்கணம், 7 யாப்பிங்சாரிகை, 8 ஜீவகசிந்தாமணி 9 சிலப்பதிகாரம், 10 உதையணன், 11 பெருங்கதை 12 தோல் காப்பியம் 13 பொருள்விளக்கம, 14 நன்னூல், 15 நேமிநாதம் 16 வெண்பா பாட்டியல், 17 நிகண்டு, 18 திருக்குறள், 19 நால்-டியார. 20 பழமொழி, 21 ஏலாதி, 22 திணைமாலை நூற்றைம்பது 23 சிறுபஞ்சனமூலம், 24 அறநெறிசாரம், 25 யசோதரகாவியம்

26 கலிங்கத்து பரணி 27, லக்கம் 28, நெல்லிலக்கம் 29, எண் சுவடி 30 பெருகுழி 31 குறுசுழி திருநூத்தந்தாதி இப்படி பலநூல் கள் ஜைனர்களுடையது இதில் பலதை பவிதமாக்கி உள்ளார்கள் மற்றும் சிலவிடம் மாற்றம் இதோடு அல்லாமல் ஸமஸ்ருத வித் வானுக்கு உதவும் நிகண்டு அமரசிம்மனுல் எழுதியதை மாற்றி அமரன் என்னும் வித்வான் பெயரையே வைத்தள்ளார்கள் இதை அறியாது வித்வானுக முடியாது இதுவும் ஜைனநூல் இதில்முதல் சொர்கவர்க காண்டத்தில் 72 கவிகளை நீக்கிவிட்டார்கள்

இன்னும் சில வித்வான் கூறிய சான்றுகள்பல பல உள்ளன ஆயி னும் சிலவற்றை கூறுகிறேன் 1. ஸ்ரீமான் இராமஅய்யர் 2, ஸ்ரீமான் வீரராகவ அய்யர் 3. ஸ்ரீமான் சாத்நூர் விஸ்வனுதய்யர் 4 திரு வாளர்சுப்ரமண்ய பிள்ளை 5, ஸ்ரீமான கல்யாணசுந்தரமுதலியார் இவர்களைப்போல் பலர் பழைய தமிழ் சமயம் ஜைனர்களுடையதே இந்த ஜைன சமயம் ஆதிஜினர்காலம தொட்டு மஹாவீரா வரை அதாவது உ சோடாகோடி ஆண்டுகளாக தொடர்ந்து வந்தவை

ஆனல் ஆதிபகவான் முதல் தர்மபோதகர் இவருககுபின் ஒருவர் பின் ஒருவரும் பலகோடி ஆணடுக்குபின் குறைந்த காலம் பின்தோன்றியவர்களில் கடைசியவர் மஹாவீரர் இவர் மோக்ஷம் சென்று இன்றுவரை2513 ஆண்டுகள் கடந்தோடின. இவருக் குப் பின பல ஷக்தி மிக்க சித்தி படைத்த எண்ணற்ற முனிவர்கள் வாழ்வை வென்ருர்கள் மேலும் இந்த முனிகள் ஜைன ஷாஸ்த்திர ங்களானதை 12 அங்கங்களாக பிரிந்தது அதை விளக்கி பல கோடி களாக அடங்கிய வாத்தையை கவிகளாககி லக்ஷமாகவும் கோடி களாக எண்ணற்ற பிரிவாக்கி விளக்கியுள்ளதில் இவாகள் செய்த பிழை அதன்மீது அமர்ந்த தூசி போல அதனுல் கறபனையில்மூழ்கி தான் கெடுவது மல்லாமல் மறறவரையும் வாழ்க்கை சுழலில் சிக்க வைத்தார் இதனுல் பிறவி துன்பம தீராது இதோடு ஸமஸ்கிருத வித்வானுக திகழ அமரகோஷம் மிக முககியமானது இதற்கு ஷப்த ஸமயமும் தேவை இந்த அமரகோஷம் தனஞ்சய கவியால் செய் தவை போஜராஜன் காலத்துல் சபையில சகலப பொருளடங்கிய வார்த்தைகளானகவி தேவைஎன்று இவரியற்றிதைதான் சன்மானம் பெற தனஞ்செயன் மைத்துனர் அமரசிம்மன் இவர் இல்லாத நேர த்தில் தங்கையிடம் கேட்டுபபார்த்து தருகிறேன் என கூறி கொண் டுச்சென்ருன் நாளை சபையில ஒப்படைக்க இல்லாததால் சபை செல்லும போது வராதது கண்டு மனம் வருந்தி தன் திறமையால் அதிலுள்ளதை சுருக்கமாக 250 கவியில சுருக்கி முடித்தார் இதில் 50 கவி பல பொருள் விளக்கம் தந்தா அரசனிடத்தில் ஒப்படை த்த போது விரோதி காளிதாசன் இவ்னுக்கு கவிஇயற்றும் தகுதி இல்லை எனக் கூறி அவமானம் செய்தான கடையில் சாளி துணை செயலறவாதில் தோல்வி கண்டான் அன்று எழுதிய அமர கோஷ த்தில் சொாகவர்கம் என்ற படலத்தையும் 24 ரின் யக்ஷயக்ஷிகளின பெயரையும் நீக்கி விட்டார்கள் ஆயினும் இவர் அறிவிற்கு எட்

டாத கவிகள் பலதை இவர்கள் காணவில்லைபோலும் இப்படி பல பல மாற்றத்தை செய்தார்கள் என அறியவும் சொர்கவர்கத்தில் 72 கவினை நீக்கினர்கள் இது அமரசிம்மனுடையது அப்போது 92 சமணத் துறவிகள் எழுதிய ஜைன நூல்கள் தமிழனுக்கு தமிழகதுறவிகள் தந்தது பேருதவியாகும் லக்ஷோபலக்ஷம் ஆண்டு களாக தொடர்ந்து பிழைத்து வந்த சமண மதம் எண்ணிக்கையில் குறைந்தும் ஒளி மங்காது என்றும் நிலைத்துள்ளது தர்மம் நிலைக்கும் அதர்மம் அழியும் அறம் ஓங்குக !

அஹிம்சாபரமொதர்ம :

க்ஷேமம் சர்வப் ஜானும் ப்ரபவது பலவால்
தர்மமிதோ பூமி பால: காலே காலேச ஸம்யக்
ப்ரவாஷது மகவான் வ்யதயோயாந்து நாஷம்
துர்பிக்ஷம் செளரமாரி க்ஷணமு ஜகதாம்மா ஸ்மபூஜீயலோகே
ஜைனத் தும்தர்ம சகரம் ஸர்வ் ஸெனக்யப் ரதாயி வேங்க

சுபம் சுபம் சுபம்